Vol. 6, Issue : 01 June - 2022

புதிய அவையம்

ISSN : 2456-821X

==================================================================

## கிறித்தவ சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம்

***த. ஜெயசீலி,***
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),*
*தமிழ்த்துறை.*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் – 635 601.*

==================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*கிறித்தவ சமயப்பணிகளில் தமிழ்த் தொண்டும் முதன்மைச் சிறப்புக் கொண்டதாகும். தத்துவப்போதகர், வீரமாமுனிவர், சீகன்பால்கு, கால்டுவெல், ஜி.யு. போப் போன்ற எண்ணற்ற மேனாட்டவரும் வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகர், எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, திட்டுர் தேசிகர் போன்ற பல உள்நாட்டு மேதைகளும் புலவர்களும் தமிழில் இலக்கியங்கள் படைத்துத்தமிழை வளமைப் படுத்தியுள்ளனர்; உலகறியச் செய்துள்ளனர். அந்த மரபு வழியில் கிறித்தவம் தொடர்ந்து சமுதாயத்தொண்டும், சமயத்தொண்டும் ஆற்றி வருகின்றது. உலகில் இந்தியாவைப் பொறுத்தளவில் பழம்பெருமை வாய்ந்த தமிழ் மொழி தமிழ் மக்களின் மேன்மையை உலகுக்கு உணர்த்துவதாக நீடு நிலைத்துள்ளது. மொழிக்குத் தொண்டாற்றுவது அம்மொழிசார் மக்களுக்கே தொண்டாற்றுவதாகும். கிறித்தவ சமயப் பணியைச் செய்வதற்காகத் தமிழ்நாட்டிற்கு வந்து சமயப் பணியோடு தமிழ் இலக்கிய பணியையும் செய்தனர் மேனாட்டவர்கள். தமிழில் காவியம் படைத்தனர்; உரைநடை நூல்களை வழங்கினர்; காப்பியங்கள் இயற்றினர்; சிற்றிலக்கியங்களை செய்தளித்தனர், அகராதி நூல்களும், இலக்கண நூல்களும் தந்து தமிழ் இலக்கியங்களின்*

அழகையும் ஆற்றலையும் உலகறியச்செய்தனர். கல்வி அறிவு மிகுதியும் இல்லாத மக்களும் படித்து அனுபவிப்பதற்காக, வாய்மொழி இலக்கியம் போல் தோற்றந் தரும் அம்மானை, கும்மி, தூது, கலம்பகம், உலா, தாலாட்டு பாடல்களும், நாட்டுப்புற இலக்கியங்களையும் படைத்தளித்தனர். தமிழ் மரபுகளையும், கலாச்சாரத்தையும் பண்பாட்டினையும் சேர்த்தளித்தனர்.

**முன்னுரை**

கிறிஸ்தவச் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களைக் கூறினாலும் இயேசுநாதரின் ஒப்பற்ற அன்பையும், தூய்மையையும் எடுத்துக்கூறி கிறிஸ்துவைக் கண்டவர்கள் தூய்மையுடனும் மனித நேயத்துடனும் வாழ வேண்டும் என எடுத்துச்சொல்கின்றன. இயேசுநாதரை ஒப்பற்ற இறைவனாக்காட்டுகின்றன. எளிமை, இனிமை, வேகம், விறுவிறுப்பு அனைத்தையும் ஒருங்கே கொண்டு யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் இயேசுநாதரை மீட்பராக இரட்சகராக சிலுவை நாதராகக் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் படைத்துக் காட்டுகின்றன. கிறிஸ்தவச்சிற்றிலக்கியங்கள் சமூக சிந்தனைகளை பதிவு செய்யும் பொழுது சமூகம் உய்யும் வழியான மனித நேயப்பண்புகளைச் சுட்டிக்காட்டி, தனிப்பட்ட மனிதனும் பகை, மனக்கசப்பு, பழிவாங்கும் குணங்களைவிடுத்து அன்பு செய்தல், மன்னிக்கும் மனப்பான்மை, பகிர்ந்தளிக்கும் சமுதாயம், பிறர் துயர் துடைத்தல், இரக்கம், தூய எண்ணம், தீண்டாமையை ஒழித்தல், பெண் விடுதலை போன்ற மனித நேயப்பண்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அன்பு செய்தல்**

ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு என இயேசு பெருமான் பகைவனிடத்தும் அன்பு செய்யக்கற்றுக்கொடுத்தார் என திட்டூர் தேசிகர் தனது செல்லப்பிள்ளை தாலாட்டு எனும் சிற்றிலக்கியத்தில் குறிப்பிடுகிறார் இதனையே

**‘‘அன்பின் சமுத்திரமோ? ஆதரிக்கும் கன்மலையோ?**

**இன்பின் மறைவிடமோ? எவ்வுயிருக்கும் தாயகமுமோ?’’**

- (செல்லப்பிள்ளை தாலாட்டு, பா.29)

இயேசுவின் அன்பு பெரியது. மகாசமுத்திரம், ஆதரிக்கும் கன்மலை, இன்பத்தின் ஊற்று, எல்லா உயிர்க்கும் தாயகம் எனவே அன்பினில் வளரும் குடும்பமும், சமுதாயமும் உயர்நிலையை அடையும் என்கிறார் ஆசிரியர் திட்டூர் தேசிகர்.

**மன்னிக்கும் மனப்பான்மை**

பல்லுக்குப்பல், கண்ணுக்குக்கண் என குற்றங்களை பெரிதாக்கி எல்லார் முன்னிலையிலும் இழிவுபடுத்தும் யூத சமூகத்தில் இயேசுபெருமான் விபச்சாரி என குற்றப்பழி சுமத்தப்பட்ட பெண்ணை ஒரு போதகர் என்ற முறையில் தீர்ப்புக்கூற அதிகாரம் இருந்தும் அவளை தீர்ப்பிடாமல் மன்னித்து இனிபாவம் செய்யாதே எனக்கூறி அனுப்புகிறார். மன்னிப்பு ஒரு வலிமையான ஆயுதம் என்றும் சமுதாயத்தை மாற்றக்கூடிய மனித நேயப்பண்பாகும் எனத் தெளிவாக தெரிகிறது.

கல்வாரி மலையில் இயேசுவின் வலப்புறம் அறையப்பட்ட கள்வன் தன்னையும் பரலோகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டபொழுது இயேசு அவனுடைய குற்றங்களையெல்லாம் கண்ணோக்காமல் இன்றே என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என உறுதியளிக்கின்றார். இதனை

**''வலக்கள்ளனை மலையப்பனை**

**மகதல ஊர் மரியை**

**செகதலத்தார் நரரை**

**மாசு தீர்த்த ஏசு நாதா**

**ஆசீர்வாதம் புரியே''**

- ***(ஞானநொண்டி. பா. 15)***

எனப்பாடுவதன் மூலம் மூன்று ஆண்டுகள் தன்னோடு ஒன்றாக உண்டு, இறைப்பணியில் அருகில் இருந்து போதனைகளையும் வாழ்வையும், பகிர்ந்துகொண்டு சீடராக வாழ்ந்த பேதுரு மூன்று முறை தன்னை மறுதலித்தபோதும் அவரை மன்னித்து, திருச்சபைக்கு பாறையாக அமைத்து, தலைவராகவும் அருள்பொழிவு செய்கின்றார்.

ஏழு பேய்கள் பிடிக்கப்பட்டவளும் விபசாரத்தில் கையும் களவுமாக பிடிக்கப்பட்ட மதலை மரியாளின் மனமாற்றத்தையும், கண்ணீரையும், அன்பையும் கண்டு அவளை மன்னிக்கின்றார். சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ சக்தியை அளிக்கின்றார். இயேசு உயிர்த்ததும் மததலை மரியாளுக்குத்தான் முதன்முதலில் காட்சியளித்து அருள்புரிகின்றார்.

அதுமட்டுமல்லாமல் ஆதாம் ஏவாள் செய்த பாவத்தினால் விளைந்த சாவைப்போக்குவதற்காக பாவமன்னிப்பு பலியாகத்தன்னைபபலியாக்கி உலக மக்களின் பாவத்தை மன்னிக்கிறார் மன்னிப்பு ஒன்றே இழந்த நல்வாழ்வை மீட்டுத்தரும் என்பதில் ஐயமில்லை என்பதை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் காட்டுகின்றன.

மனித நேயத்தின் மாண்பு வெளிப்படும் வகையில் மன்னிப்பின் பயன்பற்றி கிறிஸ்து மொழிக்குறள் என்னும் சிற்றிலக்கியம் பாடுகிறது. இதனையே "மன்னித்தால் நீவீர் பிறர்குற்றம், வானப்பன் மன்னிப்பான் நுங்குற்றம் மாய்த்து" (கிறிஸ்து மொழிக்குறள் எனப்பாடி பிறர் செய்த தவறுகளை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் சமூகத்தில் அமைதி நிலவும், ஒற்றுமை ஓங்கும் என குரல் கொடுக்கிறார் ஆசிரியர் திரு.வி. கல்யாண சுந்தரனார்.

**பகிர்ந்தளிக்கும் சமுதாயம்**

சுதந்திர நாட்டில் இன்றளவும் வறுமை, பஞ்சம், இல்லாமை, கல்லாமை இருக்கக்காரணம் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர் என்பதல்ல . மாற்றாக வளங்கள் இல்லாதவரோடு பகிரப்படாமல் ஒரு சில அதிகார வர்க்கத்தினரே அனுபவிப்பதால்தான் என்பது வெள்ளிட் மலை ஆகும் .

'பகிர்வு' மனிதநேயப்பண்பு கிறித்த சிற்றிலக்கியங்களில் முன்மாதிரியாக எடுத்தாளப்படுகிறது. இதனையே பெத்லகேம் குறவஞ்சி பின்வருமாறு பாடுகிறது.

**''எலியாகத்தீர்க்கனின் நாளி, லுல, கெங்கேயுங் கடும் பஞ்ச முண்டான போது,**

**தொலையாத கவலையினாலே, காட்டில் சுப்பியொடிக்க வந்த கைம**

**பெண்டீரண்டை,**

**மலையாதே யெண்ணெயு மாவு , வற்றாது என்றவனுத்தாரஞ் சொல்லப்,**

**பலகாரம் தோசைகள் சுட்டு , அவள், படைத்துப் படைத்துக்குறி கேட்கலையோ**

**அம்மே – விச்''**

- (பெத்லகேம் குறவஞ்சி – 432)

எனப்பாடுகிறது பெத்லகேம் குறவஞ்சி.

இயேசுபிரான் மலைச்சொற்பொழிவு முடிந்தவுடன் மக்கள் அனைவருக்கும் உணவு கொடுக்க விரும்பினார். ஆனால் ஐந்து அப்பமும் இரண்டு மீன்கள் மட்டுமே இருக்க அவற்றை ஆசீர்வதித்துக் கொடுக்க, அதனை உண்டவர்கள் பெண்கள், குழந்தைகள் தவிர ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்களாய் இருந்தனர். உண்டபின் பன்னிரெண்டு கூடைகள் மீதம் எடுத்தனர். இதனையே

***"அப்பங்கள் ஐந்தாலே ஐயாயிரம்பேரின் அரும்பசியை முற்று மாற்றி"***

- *(இயேசுபிரான்பிள்ளைத்தமிழ் 93)*

என இஇயேசுபிரானபிள்ளைத்தமிழ்ல் இயேசு மக்களின் தேவையை உணர்ந்து உணவினை பகிர்ந்தளித்த பண்பாளராக காட்டப்படுகிறார். இந்த பகிர்வு கொண்ட உள்ளம் உடைய சமூகத்தில் தேவைகள் சமமாக நிவர்த்தி செய்யப்படுகிறது. இல்லாமை களையப்படுகிறது என்பது உண்மையே நெருப்பில்கூட ஒருவன் உறங்கிவிட முடியும் ஆனால் வறுமையில் உறங்க இயலாது.

**பிறர் துயர் துடைத்தல்**

பெரும் திரளான மக்கள் தன்னைத் தேடி வந்த போது இயேசு பெருமான் அவர்களை அரவணைத்து பகிர்ந்தளிக்கும் பண்பாளனாக திகழ்ந்தார். இயேசுவின் கரம் உள்ளத்தாலும் உடலாலும் சோர்ந்த இருந்த மக்களை திடப் படுத்துகிறது. பாலைவனத்தையும் பசுமையாக்க வல்லுமையடையவர் என்பதை தனது வாழ்வின் செயல்களால் நிரூபித்தார். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்குப்பகிர்ந்தளித்தது அவர் மக்கள் மீது கொண்ட அன்பினால் தான் என்பதை உணரமுடிகின்றது. '**உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் உறவு கலவாமை வேண்டும்**' என்ற வள்ளலாரின் கூற்றின்படி தன் மனதிற்குப்பட்டதை வெளிப்படையாக கூறுவதில் அவரது மனப்பாங்கினைத் தெளிவாக அறிய முடிகிறது.

இயேசுவோடு இருந்த சீடர்கள் தன்னிடம் எதுவும் இல்லை, நேரமாயிற்று , வாங்க முடியாது என்று பலவிதமான சொற்களைக்கூறினர். அவர்களின் சொற்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து மனமுவந்து உதவி செய்தார். '**பெத்லகம்**' என்றால் '**அப்பத்தின் வீடு**' என்பது பொருள். எனவேதான் அப்பத்தை பகிர்ந்தளிப்பவராகத் திகழ்கின்றார். இயேசு பிறந்தபோது தீவனத் தொட்டியில் கிடத்தினர் என்று லூக்கா நற்செய்தியில் குறிப்பிடுகிறார். *(லூக்கா:1:7,12,16)* எனவே இயேசு மக்களுக்குத் தன்னைப் பகிர்ந்தளிக்கும் மாமனிதனாகத் திகழ்வதை அறியமுடிகிறது.

**இரக்கம்**

மனிதநேயம் நிறைந்துள்ள நாடு பல்வேறு நலங்களையும் வளங்களையும் தன்னுள் பெற்று நிறைவுபெறும்; இரக்கச்செயல்கள் போற்றி பாதுகாக்கப்படும். வாழ்வு பெறும் பொருட்டே வந்ததாக இயேசு கூறுகின்றார். ஏழை எளியவர் மேல் இரக்கம் கொண்டு அவர்களது நோய்களை குணப்படுத்தி குறைவை நிறைவு செய்து முழு மனிதனாக மாற்றுகின்றார். இதனையே பெத்லகம் குறவஞ்சி பின்வருமாறு பாடுகின்றது.

***''வாலிபனான பிறவிக்குருடனை***

***மானுவேல்பார்த்து மனதுருக்கத்துடன்,***

***சீலத்தரையினில் துப்பியுமிழ் நநீரில்***

***சேறதுண்டாக்கியச் சேற்றைக்குருடனின்***

***கோல் விழியினில் போட்டு சீலோகாம்***

***குளத்தில் கழுவெனச் சொன்ன படிக்கவன்***

***சாலி அனுப்பட்ட டோரென்ற அர்த்தத்***

***தடாகத்தில் பார்வையடைந்து விழித்தால் போல் – விழி''***

- *(பெத்லகேம் குறவஞ்சி – 658)*

வாலிபனான பிறவிக்குருடனை இயேசு பெருமான் மன வருத்தத்துடன் பார்க்கின்றார். அவரது இதயத்திலே இரக்கம் ஊற்றெடுக்கிறது. உடனே தரையில் எச்சிலை உமிழ்ந்து சேற்று உண்டாக்கி அக்குருடனின் கண்களில் பூசி சீலோவாம் குளத்தினிலே கழுவுமாறு சொல்கிறார். தன்னை போதகர் இயேசு என அவனிடம் வெளிப்படுத்தவில்லை. குருடனும் சீலோவாம் குளத்தில் கண்களைக்கழுவ பார்வை பெறுகிறான். இங்கு இயேசு பெருமான் தான் செய்த இரக்கச் செயலை பிறர் அறியாதவாறு செய்கின்றார். இன்றைய சமூகம் எந்த நற்செயலையும் விளம்பரம் செய்து தன்னைப்பெருமைபடுத்தும் உலகில் தான் செய்த நல்லசெயலும், இரக்ககுணமும், பெருந்தன்மையும் யாரும் அறியாமல் செய்யும் இயேசுவின் பற்றற்ற மனநிலை நம் சமூகத்திற்கு மிகத்தேவையான ஒன்று. நீ உன் வலக்கை பிறருக்கு செய்யும் உதவியை உனது இடக்கை அறியாதிருக்கட்டும் என்னும் இயேசுவின் கூற்று வாழ்வாக மாறவேண்டும்.

**தூய எண்ணம்**

வீரமாமுனிவர் துறவியாதலால் மண்ணை வெறுத்தல், பெண்ணை வெறுதல் என்ற அழுத்தமான கருத்தை ஆணித்தரமாக வெளியிடுகிறார். கிறித்தவ சிற்றிலக்கியங்கள் அனைத்துமே பெண்ணாசை, மண்ணாசை மற்றும் பதவி ஆசை நீங்காவீடில் மோட்சம் கிடைக்காது என்கிறது. இதனையே திருக்காவலூர் கலம்பகம்

**"மான் எய்தான் வான் பெற்றான்**

**வான் பெறான் காவலூர் மான் எய்தான்''**

திருக்காவலூர் கலம்பகம் பா. 73

எனப் பாடுகின்றது.

**தீண்டாமையை ஒழித்தல்**

உலகில் மனித வாழ்வை மகத்தானதாக மாற்றி மாதிரி வாழ்வை மேற்கொண்டோர் பலர். அத்தகைய அளவில் இறைவனின் திருமகன் என்று அறியப்பட்ட இயேசு பெருமானின் வாழ்வு மானிட குலம் அனைத்திற்கும் மாதிரியாக விளங்குகின்றது. குறிப்பாக யூதர்கள் சமாரியர்கள் என்ற ஏற்றத்தாழ்வினை சுட்டிக்காட்டி சமூக மாற்றத்திற்கு வித்திட்டதை தமிழ் சிற்றிலக்கியங்கள் பதிவு செய்கின்றன. இதனையே

**"சீர்கெட்ட ஜாதிகளைச்சீர் பொடுந்தச் செய்தவனே" என்றும்**

**செல்லப்பிள்ளை தாலாட்டு ப.25.**

**"ஜாதி வித்தியாசம் தலையரியும் சீபதியோ"**

செல்லப்பிள்ளை தாலாட்டு ப.26 என்றும் ஆசிரியர் திட்டூர் தேசிகர் சமூகம் சாதியினால் பிரிந்து கிடப்பதை எண்ணி சமூக உணர்வு மேலிட்டவராய் சாடுகின்றார்.

**''காசிமீரர் சூர சேனர் அவந்திரர்**

**காசர் குலிந்தர்நே பாளரையல்லாமல்,**

**தேசமினூடெழு நான்வகைச்சாதியில்**

**தேர்ந்த வேளாளர் முதலியராரியர்,**

**பூசரர் வேதப்பிராமணர் வள்ளுவர்.**

**புக்காரர் பட்டுநூல் காரர் மராட்டியர்,**

**மோசஞ்செய்கள்ளரிடையர்மறவர்கள்**

**மூடர்களுங்கடத் தேறும் வழிவர – கண்ட''**

- *(பெத்தலகேம் குறவஞ்சி பா.558)*

இந்திய மண்ணில் சாதி தலைவிரித்தாடுகின்றது என்ற உண்மையை சுட்டிக்காட்டும் விதமாக நாட்டில் உண்டாயிருக்கின்ற நான்கு வகை இனத்தில் தேர்ந்த, தங்களையே உயர்ந்தவர்கள் எனக்கருதும் வேளாளர், முதலியார், ஆசிரியர், வேதப்பிராமணர், வள்ளுவர், பூக்காரர், மறவர்கள், மூடர்கள் முதலான சாதியின் பெயர்களில் பிளவுபட்ட சமுதாயத்தை சாடுகின்றார். மேலும் இயேசுவின் புதிய போதனையை ஏற்றுக்கொள்பவர் சாதி வேறுபாட்டினை களைந்து அவர்முன் ஒன்றாகக்கூடுவதாக ஆசிரியர் தஞ்சை தே.வேதநாயகம் பிள்ளை கூறுகின்றார்.

**பெண் விடுதலை**

ஆசிரியர் வேதநாயகர் பெண் கல்வியினால் ஏற்படும் நன்மைகளை விவரிக்கின்றார். தாயானவள் கல்வி கற்றிருந்தால் குழந்தைகளுக்கும் கல்வி கற்று ஒழுக்கத்துடன் விளங்குபவர். பெண் சமூகம் விடுதலையடையும். இதனையே

''**படித்தறியாத பெண் ஒரு வாழ்க்கைக்கு**

**பாயற்றகப்பலைப் போலாகும்**

**படித்துமூட மனைவி நடுக்கடல் பச்சைமரமிதப் போக்குமடி''**

- *(மாதர் கும்மி. பா. 209)*

எனப் பாடுகிறார்.

அழகாக உடை உடுத்திக்கொண்டு நடப்பதிலும் நற்பத்தினி என்று அனைவரும் புகழ்ந்து பேசும்படி நடக்க வேண்டும். அழகிய சேலை, பொன்னால் செய்த ஒட்டியாணம் ஆகியனவற்றை வாங்கி அணிந்திடில் நல்ல அழகனைத் தரும். நல்நடக்கையோடு கூடிய நற்பெயரும் அமைந்துவிட்டால் அவற்றைவிட இவையே நல்ல அழகினைத்தரும். இதனையே பின்வருமாறு ஜா.சே.வேதநாயகர் பாடுகிறார்.

''**வன்னக்கம்பிச்சேலை**

**பொன்னொட்டியாணமும்**

**வாங்கியணிந்திடல் நல்லழகே**

**நன்னடையோடு நற்பேரு மதைவிட**

***நல்லழகா முத்து மாதரசே''***

- *(மாதர் கும்மி. பா. 25)*

**முடிவுரை**

*கிறித்தவச்சிற்றிலக்கியங்களில் ஓரங்கட்டப்படும் மனிதர்களையே கதைமாந்தராக்கிப்படைத்திருப்பதும், அவர்களை மனித மயமாக்குவதும், இயேசுவின் சமத்துவ சரிநிகர் சமமான- சமநிலைச்சமூகமாக மாற்றும் அறநெறியை கலைவடிவாகிய எதார்த்தமாகக் காணமுடிகிறது. இந்த அறவாழ்வு நாம் வாழும் குறிப்பிட்ட சூழலில் இறைத்திட்டத்தை உணர்ந்து, அறிந்து அங்கு இறையாட்சியை உருவாக்க முனைகிறது. இறையாட்சி உருவாக்கம் முழு மனித விடுதலையாக, ஒருங்கிணைந்த விடுதலையாக, அனைவரும் இறையாட்சியில் சகோதர- சகோதரிகள் என்ற புதிய உறவுச்சமூகமாக வடிவம் பெறுகிறது. இந்த அறவாழ்வின் அடிப்படை அறநெறிக் கடமை இயேசு பெருமான் சமூகத்திற்கு அளித்திட்ட கொடையாகும். அது ஏழைகள் சார்பாக நாம் எடுக்கும் நிலைப்பாடாகும். இதன்மூலம் சமூகமும் மாற்றம் பெறும்.*

*தான் என்னும் சுயநலமும், தனக்கு என்னும் இச்சையுமே மனிதனை குறுகிய எல்லையில் சிறைபடுத்துகின்றன. மனிதன் தனது கடந்த காலச் சாதனைகளையும், நிகழ்கால வெற்றிகளையும், எதிர்கால முன்னேற்றங்களையும் குறியாகக் கொண்டு ஏக்கத்துடன் அலைகிறான். இச்சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமை வாழ்விற்காக, வாழ்ந்து மதிப்பீடுகளை எடுத்துரைத்து அதற்காகவே தன் உயிர் நீத்த சமூக சீர்திருத்தவாதியாக இயேசுவை சித்தரிக்கின்றன கிறித்தவச்சிற்றிலக்கியங்கள். அவருடைய வாழ்வியல் கோட்பாடுகளும், சிந்தனைகளும் இன்றும் குடும்பம், சமூகம், உலகம் என பரந்து விரிந்து விதைக்கப்பட்டால் சமூக மாற்றம் நிச்சயம் என கிறித்தவ சிற்றிலக்கியங்கள் குறிப்பிடும் கீழ்வரும் பண்புகளை, சமூக சிந்தனைகளை ஆராய்வதே*

**பார்வை நூல்கள்**

*1. குமரிச்செழியன், 2018, ஞான நொண்டி நாடகம், சாரதா பதிப்பகம், ஜி -4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ராயப்பேட்டை, சென்னை – 14.*

*2. சுந்தரராசன். சே, 2009, திருக்காவலூர் கலம்பகம், முல்லை நிலையம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108.*

*3. சுந்தரராசன். சே, 2015, கித்தேரியம்மாள் அம்மானை, முல்லை நிலையம், 9. பாரதி நகர், முதல் தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017.*

4. சுந்தரராசன். சே, 2009, பெத்லகேம் குறவஞ்சி, முல்லை நிலையம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108.

5. ஞான சந்திர ஜாண்சன். யோ, 2009, கிறித்தவத் தமிழ் இலக்கிய வளம், முல்லை நிலையம், 9. பாரதி நகர், முதல் தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017.

6. இன்னாசி. சூ. கிறித்தவத் தமிழ்க்கொடை, தொகுதி – II, மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001.

7. செல்லத்துரை. அருள் பாவலர், இயேசுபிரான் பிள்ளைத் தமிழ், இரண்டாம் பதிப்பு, எண். 255, எசு1, மூன்றாம் முதன்மைச் சாலை, வெங்கடராமன் நகர், அசுதினாபுரம், சென்னை – 600 064.

8. மணிவளன் சே. ச. சி. முனைவர், கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் மதிப்பீடுகள், கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி – 02.

9. சுஜாதா தேவி. அ, கிறித்தவ சமயச் சிற்றிலக்கியங்கள், ஜீவா பதிப்பகம், மனோகர் மேன்சன், 12/ 28, சௌந்தரராஜான் தெரு, சென்னை – 17.

10. ஞான சந்திர ஜாண்சன். யோ. முனைவர், கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு, ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை – 600 119.

11. செல்வராசகோபால். க.தா, பெத்தலேகம் கலம்பகம், ஜீவா பதிப்பகம், மிசிஸ்சாகா, ஒன்ரோரியா, கனடா. முதற்பதிப்பு: 1986

12. தாவீது அதிசயநாதன், திருக்குமார சதகம், 6. முதல் தெரு, பிஷப் டேவிட் நகர், வேலூர்- 632 001, 1983.

பதிப்பகம்